
# ஆத்ம ஜோதி



ஸ்ரீ இராமகிருஷ்ண பரமகம்சர்

# ஆத்ம ஜோதி

ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே—சுத்தானந்தர்

| சோதி 8 | மன்மத௵ மார்கழீ 1-ந்உ (14-1-56) | சுடர் 4 |
|---|---|---|


## பொருளடக்கம்.


| | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | அணிசேரவருக | 97 |
| 2 | ஸ்ரீ இராமகிருஷ்ணர் .. ...ஓர் நான் | 98 |
| 3 | சரணாகதி | 99 |
| 4 | ஸ்ரீ இராமகிருஷ்ணர் ...... .. நடுவே | 102 |
| 5 | வாழ்க்கையைப் புனிதமாக்கவேண்டும் | 105 |
| 6 | நானும் எனது குருநாதரும் | 410 |
| 7 | சிருட்டி மனிதன் | 113 |
| 8 | திருமுறைக் காட்சிகள் | 117 |
| 9 | ஸ்ரீகதிரைமணிமாலை | 122 |
| 10 | மஹாமகம் | 124 |
| 11 | எனது குருநாதர் | 128 |



## ஆத்ம ஜோதி

ஆயுள் சந்தா ரூ. 75 வருட சந்தா ரூ. 3. தனிப்பிரதி சதம் 30

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்

பதிப்பாசிரியர்:- நா. முத்தையா

ஆத்ம ஜோதி நிலையம் நாவலப்பிட்டி [சிலோன்]


# அணிசேர வருக.

[கவியோகி சுத்தானந்த பாரதியார்]

துணிவுள்ள வீரர்கள் அணிசேர வருக
　துன்பத்தைத் தூவென்னும் துணைவர்கள் வருக!
துணிவுள்ள தொண்டர்கள் படைசேர வருக
　பரிசுத்த மனமுள்ள பக்தர்கள் வருக!

பேருக்கும் புகழுக்கும் பேராசை யின்றிப்
　பிறருக்கு வாழ்ந்திடும் பெரியார்கள் வருக!
ஊருக் குழைத்திடும் உத்தமர் வருக
　உபகார சீலர்கள் உடனோடி வருக!

அருளினைத் தேடிடும் அறவோர்கள் வருக
　அன்புடன் கூடிடும் பண்பர்கள் வருக!
பொருளினைப் பொதுவாக்கும் புண்ணியர் வருக
　பொழுதினைப் பொன்னாக்கும் புலவர்கள் வருக!

பீடுறத் தொழிலாற்றும் பெருமையோர் வருக,
　பிச்சையே கேளாத பெருந்தொண்டர் வருக'
நாடுமுன் னேறவே வீடுமுன் னேற
　ஞாலமுன் னேறவே நாடுவோர் வருக!

அஞ்சாத தீரர்கள் அரிபோல வருக
　அடிமைத் தளைகளைப் பொடிசெய்ய வருக!
துஞ்சாத பரஞான சூரியர் வருக
　சுத்தான்ம நேயர்கள் சுடரோங்க வருக!

## ஸ்ரீ இராம கிருஷ்ணர் முன்னிலையில்
# ராம்லால் என்றசீடர் ஓர்நாள்

என்பரம! எனக்கெல்லாச் செல்வமும் நீ.
இன்னுயிர்க்கும் உயிராவாய் உள்ளுக் குள்ளே
மன்னுலக மூன்றிலும் நின்னை யல்லால்
மனமார எனக்குரியார் யாருமில்லை.
பன்னுமொரு சாந்தியும்நீ இன்பம் ஆசை
பலவும்நீ எனக்காவாய், செல்வம் சீரும்
துன்னருநல் லாதரவும் நீயே அன்றோ?
தூமறையின் ஞானமும்நீ, சக்திநீயே.

நீயேயென் ஓய்விடமால், இல்லம் நீயே.
நேசமிகும் நண்டனும்நீ, உற்றார்நீயே.
ஏயுமிந்த நிகழ்காலம், சேரும் காலம்
இருஞ் சொர்க்கம்; பேசருநல் முத்திநீயே
தூயமறை யாதியநூல் யாவும் நீயே,
தொடக்கறுக்கும் கட்டளைகள் எற்குநீயே,
வாயும்நல அருள்முகிலாம் ஆசான்நீயே
வாழ்வினிலே இன்பஇள வேனில் நீயே

நன்னெறியும் கொள்குறியும் நீயே யாவாய்
நான்வணங்கற் குரியபர தெய்வம் நீயே
மென்னெஞ்சம் கனிவுற்ற அன்னை நீயே
வேண்டுங்காற் கண்டிக்கும் தந்தையும்நீ
மன்னுலகம் படைப்பானும் காப்பானும்நீ
வாழ்க்கையெனும் பெருங்கடலைத் தாண்டி யப்பால்
என்னுடைய படகினைநீ உய்க்க வல்லாய்
எல்லாமும் எனக்காவாய் எந்தாய் கோவே.



# சரணாகதி

(ஆசிரியர்)

உலகில் வேறோர் துணையின்றி இறைவனது திருப்பாதமே புகலென மனத்தால், வாக்கால், காயத்தால்; உடல் பொருள் ஆவி மூன்றையும் ஒப்புக் கொடுப்பவன் யாரோ, அவனே சரணாகதியின் முதலாவது படியில் கால்வைத்தவனாவான். என்செயலென்பது அவனிடம் சிறிதேனும் இருக்காது. தன்மூலம் ஆண்டவன் சக்தியே வேலை செய்கிறது. என்பதை உணர்வான். அப்பர் சுவாமிகள் இதனை நன்கு கூறுகின்றார்கள்.

"தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே."

நான் ஊருக்கு அதுசெய்தேன், இது செய்தேன். என்னாலல்லவா இந்த ஊர் வாழ்கின்றது என்பன போன்ற வார்த்தைகள் அப்பர் வாக்கில் தோன்றவில்லை, இறைவனருளால் நான் பணிசெய்கிறேன்' என்று தானும் அவர் கூறவில்லை. வானம் மழை பொழிந்தால் ஊர் ஊராகச் சென்று தம் பட்டம் அடித்துத் திரிவதில்லை இறைவன் எவ்வளவு கருணைக் கடல்! நாம் அவனை நினையாதபோதும் எம்பின்னே வந்து வந்து அறத்தினாலோ மறத்தினாலோ எமக்கு நன்மையானவற்றையே செய்து வருகின்றான். மேகம் உயிர்கள் மேல் கொண்ட கருணையினால் மழை பொழிகின்றது. இறைவனும் தமது குழந்தைகள் மேல் கொண்ட ஆரா அன்பினால் புறம் புறம் திரிந்து பாதுகாக்கின்றான். இறைவனது சரணாரவிந்தத்தை அடைந்த ஜீவர்களிடமும் இறைவனது கருணையில் அணுவில் ஒருபகுதியாயினும் இருக்கத்தானே செய்யும். பிறஜீவர்கள்மேல் கொண்ட கருணையால் சீவசேவையே சிவசேவையாகக் கொண்டனர். நான் சேவை செய்தேன் என்றுநினைக்கும்போதே ஒருகுடம் அமிர்தத்துள் ஒருதுளிவிஷம் கலந்ததுபோன்றதாகிவிடுகின்றது. பூரண சரணாகதி ஏற்படாமையினாலேயே இவை நிகழ்கின்றன. இதற்கு இலக்கியமாகவே அப்பர் அடிகள் ":என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்கின்றார். பணிசெய்தலில் மாத்திரம். உயிருள்ள பொருள்போலத்தெரிகிறது. பலனை எதிர்பார்த்தலில் உயிரற்ற மரக்கட்டைக்குச் சமானகச் சொல்லுகின்றார். அங்கு நான் என்ற முனைப்புக்கே இடமில்லை. கிடப்பதுஎன்ற சொல்லிலேதான் அத்தேவாரத்தின் நயம்

முழுவதும் அடங்கியிருப்பதைக் காண்கின்றோம்.

அகங்காரமே இறைவனை மறக்கச் செய்வது. அதுவே நமது கொடிய சத்துரு. அதைப்போர் புரிந்து கொன்றுவிட வேண்டும். ஐந்து வயதிலே சுத்தானந்தக்குழந்தை தேவியிடம் வேண்டுகின்றது. "எம்மாத்திரமுன் பணியிங்குளதோ

அம்மாத்திரம் வைத்தடி சேர்த்தருளாய்"

ஜகன்மாதாவின் கைகளில் நாம் ஒரு கருவியாக இருந்து அவளுடைய குழந்தைகளுக்குச் சிறிது சேவை செய்ய வேண்டுமெனப் பிரார்த்திப்போம். அப்படியில்லாது போயின், இவ்வாழ்க்கைக்கு மதிப்பு எதுவும் இல்லை. உண்மையும் தூய்மையுமான வாழ்க்கை வாழ்ந்து, அவளின் குழந்தைகளுக்குக் கூடியவரை சேவை செய்வதற்குமட்டும் நமக்கு அதிகாரம் உண்டு.

தைரியமாய் நின்று சத்தியத்தை நேருக்கு நேராகப்பார்க்கும்பழக்கம் ஏற்பட வேண்டும் எமக்கென்று ஒருலட்சியம் இருக்குமானால் அதற்காக நம் உயிரையும் தியாகம் செய்யத் தயாராய் இருக்க வேண்டும். நமது வாழ்வின் இலட்சியம் பகவானை அடைதலே. நமது லட்சியமான பகவானை வழிபட நம் உயிரைத் தியாகம் செய்யும் ஒரே ஒரு சுலபமான வழிதான் உண்டு. அதுவே பூரணசரணாகதி என்பது

"முன்னோக்கிச் செல். பிறருக்கு என்ன நேரிடுகிறதோ என்றுங்கூடத் திரும்பிப்பாராதே. இந்தச் செக்கனில் என்னைப் போன்ற ஆயிரம் பேர் இறக்கலாம். இதனால் இவ்வகண்ட உலகத்திற்கு யாதொரு கஷ்டமும் ஏற்படாது. உண்மை அழிவற்றது. அதுஎன்றும் பிரகாசித்து நிற்கும். உண்மையைப்போற்றி அதற்கே உயிரையும் அளி", இது ஸ்ரீ இராமகிருஷ்ண பரமகம்சரது'வாக்காகும்.

நமது இலட்சியமான இறைவனுடைய திருவடிகளில் சமர்ப்பிக்கப்பட்டதனை நம்முடைய சொந்தச் சுகத்திற்காகவும் திருப்திக்காகவும் உபயோகப்படுத்திக் கொள்ளும் உரிமை நமக்குக் கிடையாது. கடவுளுடைய சிரப்பணிக்கென்று உடல் பொருள். ஆவிமூன்றையும் தத்தம் செய்தவன் தன்னுடைய சுயேச்சையை நினைக்கவே கூடாது. இறைவனுடைய ஆணைக்கட்பட்டு தன் சுயேச்சையை ஒழித்துவிட வேண்டும்.'இது உண்மையான சரணாகதி. இப்படிப்பூரணமாகச் சுதந்தரத்தைத் தத்தம் செய்யாவிட்டால்



நாம் கடவுளைத் தொழுது கொண்டு வருகையில் நம் ஆசைகள் அநுகூலப்படுமட்டும் அவரைத் தொழுவோம். எந்த நேரத்தில் அவரைத் தொழுவது நம்முடைய சுயநலத்திற்கு விரோதமாக ஆகிறதோ அப்பொழுதே அதை நிறுத்தி விடுவோம். இது உண்மைத் தியாகம் அல்ல. நீ சத்தன்மையுள்ள சுயநலமேயாகும். இங்க இழிவான கிணத்தை வெற்றி கொள்ள திடமான புத்தியும் தைரியமும் வேண்டும். விவேகத்தினாலே அதனைக்களைந்தெறிதல் வேண்டும்.

மணிவாசகப் பெருமானை இறைவனார் தாமே புறம் புறத்திரிந்து வளியவந்து ஆட்கொண்டவர், திருப்பெருந்துறையிலே மணிவாசகப்பெருமான் கேட்ட கேள்விக்கு இறைவனார் அவர் மனங்கொளவிடை. கொடுத்தருளினார். அந்நேரமே உடல் பொருள் ஆவிமூன்றையும் குருவிற்கு அளித்துப் பூரணசரணாகதியானார். அதன்மேல் நிகழ்ந்த கிரியைகள் நிகழ்ச்சிகள் யாவற்றையும் குருவினுடம் ஒப்படைந்து நான் என்பதோர் முனைப்பின்றிப்பணி செய்து விடந்தார் குதிரை வாங்கக் கொண்டு சென்ற நாற்பத்தொன்பது கோடி பொன்னைச் சிவப்பணியிலே செலவு செய்தமை இறைவனரது திருவுளமாகும். குதிரை வாங்கிப் புறப்படும் போது அரசனது செல்வம் அரசனது பணி என எப்படி நினைந்தாரோ. இறைவனார் ஆட்கொண்டவுடன் தான்மாத்திரம் அன்று அரசனும் இறைவனுடைமை என எண்ணினார். ஆனபடியால் தான் அரசனுடையநாற்பத்தொன்பது கோடி பொன்னையும் சிவப்பணியிலே செலவு செய்தார். அப்படிச் செலவு செய்தமையினால் அரசனுக்குச் சிவபுண்ணியத்தையேசம்பாதித்து அருளினார். பாண்டியன்பொருள்வேண்டி வருத்தும் போது

"அன்றே என்றன் ஆவியும் உடலும் உமையைய எல்லாமுங்
குன்றேஅனையாய் எனை ஆட்கொண்ட போதே கொண்டிலையோ"

என்று முறையிடுகின்றார். பூரண சரணாகதி அடைந்தவனுக்குத் துன்பம் ஒன்றும் வருவதில்லை. யான் பூரணசரணாகதி அடைந்தும் இறைவரே நீர்தான் எம்மை ஏற்றுக்கொள்ளாது விட்டீரோ? என்று கேட்கின்றார். சரணாகதி என்பது செத்த கட்டையே தன் முனைப்புக்கு அணுவேனும் இடமில்லை. இறைவனுடைய அடியார்களுக்கு யான் இறைவனுடைய பக்தன் என்றொரு தன் முனைப்பு எழும்புகின்றது. அது எழும்பியவுடனே அவர்கள் சாதாரண

## ஸ்ரீ இராமகிருஷ்ணபரமகம்சர்
# அடியார் கூட்டத்தின் நடுவே.

'முழுஞானம் பெற்றவர் புண்ணிய பாவங்களைக் கடந்தவர். ஈசரே எல்லாவற்றையும் செய்கின்றார் என்பதை அவர்கள் உணர்வர்"

ஓரிடத்தில் ஒரு மடம் இருந்தது. அங்கே வாழ்ந்த துறவிகள் தினமும் பிச்சையெடுப்பதற்காக வெளியேறுவர். ஒருநாள் ஒரு துறவி பிச்சைக்காக வெளியே சென்றிருந்தபோது ஒரு பிரபு ஒரு மனிதனை இரக்கமின்றி அடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தார். கருணைவாய்ந்த அத்துறவி அவ்விடம் சென்று, பிரபுவை நிறுத்தச் சொன்னார் ஆனால் பிரபுவுக்குக் கோபம் பொங்கிக் கொண்டிருந்தது. அவர் அதனால் தமது கோபத்தைக் குற்றமில்லாத அத்துறவியின்மீது செலுத்தினார். துறவி மெய்ம்மறந்து தரையில் விழும்வரை பிரபு அவரை அடித்தார். யாரோ ஒருவர் நடந்த செய்தியை மடத்திற்குத் தெரிவித்தார். துறவிகள் அவ்விடத்திற்கு ஓடினர். தமது சகோதரர் அங்கே கிடப்பதைக் கண்டனர். அவர்களில் நாலைந்து பேர் அவரைத் தூக்கிக்கொண்டுபோய் ஒரு படுக்கையின்மீது கிடத்தினர். அவர்க்கு அப்போதும் அறிவு உண்டாகவில்லை. சிலர் அவருக்குக் குடிக்க ஒருசிறிது பால் கொடுக்கலாம் என்று யோசனைசொன்னார்கள். பாலை அவரது வாயில் ஊற்றியதும், அவர்க்குஉணர்ச்சிதிரும்பிற்று. அவர் தமது கண்களைத்திறந்து, சுற்றிப்பார்த்தார். துறவிகளில் ஒருவர் 'அவர்க்கு முழுதும் உணர்ச்சி வந்துவிட்டதா என்பதையும் பார்ப்போம்' என்றார். அவரது காதிற்குள் உரத்த குரலில் 'சுவாமி தங்கட்குப் பாலையார் இப்போது கொடுக்கின்றனர்?என்று கேட்க அப்பெரியார் மெல்லிய குரலில் 'என்னை அடித்தவன் இப்போது எனக்குப் பால் கொடுக்கின்றனன்' என்று பதிலளித்தார் ஆனால் ஈசனது தரிசனம் பெறாமல் அம்மாதிரியான மனநிலையை எவனும் அடைவதில்லை."

ஈசனது மாயையால் வந்த மயக்கத்தால் மனிதன் தனது சுய சொரூபத்தை மறக்கிறான். தனது தந்தையின் ஆனந்தமான ஐசுவரியத்திற்குத் தானே அதிகாரி என்பதை அவன் மறக்கிறான். இந்தத் தெய்வீக மாயை முக்குணங்களால் ஆயது அம்மூன்றும்திருடர்



களே. ஏனெனில் அவை மனிதனிடமிருந்து அவனது செல்வத்தையெல்லாம் பறித்துவிட்டு தனது சுய சொரூபத்தை மறக்கும்படி அவனைச் செய்கின்றன. முக்குணங்களாவன ஸத்வம், ரஜஸ், தமஸ் என்பன. ஸத்வம் ஒன்றே ஈசனையடையும் வழியைக் காட்டுகின்றது. ஆனால் ஸத்வமும் ஒரு மனிதனை ஈசனிடம் அழைத்துச் செல்லமாட்டாது.

ஒருநாள் ஒரு பணக்காரன் காட்டுவழியாகச் சென்றுகொண்டிருந்தான். மூன்று திருடர்கள் அவனைச் சூழ்ந்து அவனிடம்உள்ள சொத்தையெல்லாம் பறித்தனர். அப்போது அத்திருடர்களில் ஒருவன் இவனை உயிரோடு வைத்திருப்பதினால் யாது நன்மை? அவனைக் கொல்லு என்றான். அவன் அம்மனிதனை வாளால் வெட்டத்தொடங்கினான். அச்சமயம் இரண்டாவது திருடன் தடுத்து. 'இவனைக் கொல்வதனால் பயனில்லை. அவனை இறுகக்கயிற்றால் கட்டி இங்கே விட்டுவிடுவோம். அவனால் போலீசாரிடம் அப்போது ஒன்றும் சொல்லமுடியாது: என்றான் அதன்படியே திருடர்கள் அவனை ஒரு கயிற்றால் கட்டிவைத்து விட்டுப்போயினர்.

சிறிது நேரம் சென்றபின், மூன்றாவது திருடன் பணக்காரரிடம் திரும்பி வந்து, நீ மிகவும் புண்பட்டனை அல்லவா? வா, நான் உன்னை அவிழ்த்து விடப்போகிறேன் என்று சொன்னான். அத்திருடன் அம்மனிதனைக் கட்டவிழ்த்துவிட்டு, காட்டை விட்டுவெளியேறும் வழியில் அவனை நடத்திவந்தான். அவர்கள் சாலைக்கு அருகே வந்ததும் திருடன் இச்சாலை வழியே செல். நீ வருத்தமின்றி வீடு செல்வாய் என்றான். அம்மனிதனோ ஆனால் நீ கட்டாயம் என்னுடன் வர வேண்டும். நீ எனக்கு எவ்வளவு உதவி செய்துள்ளனை? எங்கள் வீட்டில் உன்னைக் காண நாங்கள் யாவரும் மகிழ்வோம் என்று சொன்னான், அதற்குத் திருடன் அது மாட்டேன். எனக்கு அங்கு வர முடியாது. போலீசார் என்னைக் கைதியாக்குவர் என்று பதிலுரைத்தான், அப்படிச் சொல்லிக்கொண்டே பணக்காரனுக்கு வழியைக் காட்டியபின் அவனை விட்டுச்சென்றான்.

இக்கதையில் இம்மனிதனை உயிரோடு வைத்திருப்பதனால் யாது நன்மை? அவனைக் கொல்லு என்ற முதல் திருடன் தாமே குணம் அது அழிக்கிறது. இரண்டாவது திருடன் ரஜோகுணம். அது ஒரு

மனிதனை உலகத்தோடுபிணைத்து. அவனைப் பலவித முயற்சிகளில் சிக்கவைக்கிறது. ரஜஸ் ஈசனை மறக்கும்படி அவனைச் செய்கிறது. ஸத்வம் மட்டும் ஈசனிடம் செல்லும் வழியைக்காட்டுகிறது. தயை நேர்மை, பக்தி போன்ற குணங்களை அது உண்டாக்கிற்று. இன்னும். ஸத்வம் என்பது ஒரு படிக்கட்டின் கடைசிப்படி போன்றது அதை அடுத்திருப்பது மச்சுதான். பரப்பிரம்மமே மனிதனது சுய இருப்பிடம் முக்குணங்களையும் தாண்டும் வரை பிரம்ம ஞானத்தை அடையமுடியாது.



*101.ம்பக்கதொடர்ச்சி*

உலக மக்களிலும் மிகக் கீழ்த்தரமாக நடந்து கொள்ளக்காண்கின்றோம். நான் சந்நியாசி என்று நினைப்பவன் ஒரு போதும் உள்ளத்தோடு பொருந்திய சந்நியாசி அல்லன். அவன் வெளிவேடத்தில் மாத்திரம் சந்நியாசி என்று தன்னைக் காட்டிக் கொள்ளலாம். தன் முனைப்பு ஒருவனிடமிருந்து பல வழிகளில் வெளிப்படலாம். இந்த இடத்திலேதான் மனிதன் விழித்திருக்க வேண்டும். பூரணசரணாகதி ஏற்படும் வரை அகங்காரத்தினின்றும் தன்னைக்காத்துக்கொள்ள வேண்டும். அதுவே பூரணசரணாகதியாகும்.

இகவோக விஷயங்களில் பற்றற்றிருப்பது மற்றுமொரு அவசியமான விஷயம் பேராசையினின்று மனதைத் திருப்பிவிட வேண்டும். எவன் இங்கேயே தன் சரீரத்தை விட்டுப்பிரியுமுன்பே ஆசை வெகுளி இவைகளை எதிர்த்து நிற்க வல்லனோ அவனே விழிப்புடையவன். அவனே பாக்ய வந்தன். இதை அனுபவ பூர்வமாகப்பெற முயற்சிசெய். நீ உடனே முக்தனாவாய். அகங்காரத்தை நொருக்கி மிதித்து 'நான் ஒரு புல்லிதழுக்கும் புல்லியன்' என்று சொல். பிறகு உன் அசுத்தங்கள் யாவும் மறைந்து விடுவதைக் காண்பாய். நீ தெய்விகமாக ஆய்விடுவாய்.

---



# வாழ்க்கையைப் புனிதமாக்க வேண்டும்.

—( காமகோடி )—

அவனன்றி ஓரணுவும் அசையாது. பிரபஞ்சத்தை ஆளும் எல்லாம் வல்ல இறைவனிடத்து அசைக்க முடியாத நம்பிக்கை கொள்ளவேண்டும். பிறரையும் கொள்ளச்செய்ய வேண்டும். ஹிருதயபூர்வமான பக்தி செலுத்த வேண்டும். இந்நம்பிக்கையை நம் குழந்தைகளுக்கு ஊட்டுவது அவர்களுக்கு நாம் அளிக்கும் என்றும் குன்றாத மூல தனம்.

இந்த மாதம் திருவாதிரை திருநாள் ஒவ்வொரு ஊரிலும் ஸ்வாமி புறப்பாடு உண்டு. சிதம்பரம் தரிசனத்திற்குப் போக பலரும் ஆசைப்படுவார்கள். ஒவ்வொரு வீட்டிலும் திருவாதிரைக் களி பிரசாதம் ஈச்வரனுக்கு அர்ப்பணம் செய்யப்படுகிறது. நம் நாட்டில் நடராஜர் வழிபாடு விசேஷமாக உள்ளது: நடராஜன் பக்கத்தில் சிவகாமசுந்தரி திருக்கோலம் கொண்டுள்ளார். மற்றொரு பக்கத்தில் கையில் புத்தகத்துடன் நிற்கும் சிறிய உருவம் மாணிக்கவாசகருடையது அவர் ஆயிரத்து ஐந்நூறு வருஷங்களுக்கு முன் மந்திரியாக இருந்தவர். ஈச்வரனே சரணமென்று தன்னை கடவுளுக்கே முடிவில் அர்ப்பணம் செய்து கொண்டவர்.

**சில கோவில்களில் விசேஷத்தன்மை**

ஆவுடையார் கோவிலில் ஒரு விசேஷம் ஸ்வாமி தெற்கு நோக்குகிறார். மூலவரை ஒருவரும் பார்த்ததில்லை, அது ரகசியம் அம்பாள் கோவிலிலும் அம்பாள் விக்ரஹமில்லை. பாதுகைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. மற்ற ஆலயங்களிலுள்ளதுபோல் நந்தி சண்டிகேச்வரருமில்லை. அன்னம் நைவேத்யம் இங்குகிடையாது அன்னத்தின் புகை தீபாராதனை செய்யப்படுகிறது. அம்பாள் யோகாம்பிகை என வழங்கப்படுகிறாள். இந்த சூக்ஷமங்களை கவனிக்க வேண்டும். இக்கோவில் சோழநாட்டிலுள்ள கட்டிடக் கலைக்குப் பெயர்போன ஐந்து கோவில்களில் ஒன்று.

தமிழ் நாட்டு பழங்காலத்து சிற்பிகள் மற்ற கோவில்களைக் கட்டும் பொழுது தாங்கள் எழுதிக்கொடுக்கும் உறுதிப்பத்திரத்

தில் கீழ்க்கண்ட இந்த ஐந்து கோவில்களில் காணப்படும் விசித்திரமான வேலைப்பாடுகளைத் தவிர மற்ற எந்த வேலையும் செய்துகொடுப்பதாய் வாக்களிப்பது வழக்கம். 1 திருவலஞ்சுழி, கருங்கல் சன்னல், 2 ஆவுடையார்கோவில் கொடுங்கை, 3 திருவீழி மழலை வௌவால் மண்டபம், 4 கிடாரங்கொண்டான் மதில், 5 தஞ்சை—நிழல்விழாத கோபுரம்.

அற்புதமான ஆவுடையார் கோவில் க்ஷேத்திரத்தில் மாணிக்கவாசகப் பெருமானுக்கு பரமசிவன் அந்தணர் வடிவில் வந்து ஞானோபதேசம் செய்து அருள்புரிந்தார். மாணிக்கவாசகர் இங்கும் நடராஜர் பக்கத்தில் கையில் திருவாசகத்துடன் காட்சி அளிக்கிறார்.

### ஆண்டாள் மாணிக்கவாசகர் சிறப்பு

ஆண்டாள் சன்னிதி இல்லாத வைணவக்கோவில் இல்லை. தனி மனிதர்களான இவர்களை கடவுளாக வழிபடுகிறார்கள். பக்தனை பூஜிப்பது தன்னையே வழிபடுவதாகும் என்பது கடவுள் உள்ளம். தனது அனைத்தையும் கடவுளுக்கே அர்ப்பணம் செய்தவள் ஆண்டாள். கடவுளால் ஞானோபதேசம் அடைந்தவர் மாணிக்கவாசகர். பகவானைத்தவிர வேறு சித்த விருத்தி இவர்களுக்குக் கிடையாது.

நம்போன்றவர்களை காமக் குரோதங்கள் அடக்கி ஆள்கின்றன. பயம், ஆத்திரம், ஆசை நம்மை பாதிக்கின்றன. இந்த பயமும் அல்பசுக ஆசையும் முடிவில் சாஸ்வதமான துக்கத்தை அளிக்கும். இந்த ஆசாபாசங்களை அகற்றுவதற்கு ஒரே வழி, எல்லாவற்றிற்கும் மூல காரணமான பரம்பொருளிடத்தில் மனதை ஈடுபடுத்துவதே. அவ்வாறு செய்தால் நிரந்தரமான ஆனந்தம் கைகூடும். இந்த நித்யானந்தத்தை அடையவேண்டுமென்ற ஆசை நமக்கு இருக்கிறது. இதற்கு வழி ஸத்சங்கம். இம்மாதிரி ஆனந்தத்தை அனுபவித்த மகான்களை நினைத்தால் நமக்கும் அது கிட்டும். பற்றற்றவர்களைப்பற்றினால் நமக்கும் பற்று அகலும். ஆசை இல்லாதவர்களை நினைத்தால் நமக்கும் ஆசை போய்விடும். எப்பொழுதும் எது உண்மையோ, எல்லாவற்றிக்கும் எது காரணமோ அதைகாரணமாகவே பார்க்கவேண்டும். நாம் அப்படி பார்க்கவேண்டும் என்பதை திருமூலர் திருமந்திரத்தில் விளக்கியுள்ளார்.



மரயானையை அரண்மனைக் குழந்தைக்குக் கொடுத்தால் அது அதில் யானையைத்தான் காணும். அதைப்பார்க்கும் தச்சனோ மரத்தைத்தான் பார்ப்பான். தச்சனுக்கு யானை தோன்றாது. குழந்தைக்கு மரம் தெரியாது. பிரபஞ்சத்தை பலபொருள்கள் ரூபமாகப் பார்க்கிறோம். சாஸ்திரம் தெரிந்த பெரியோர்களுக்கு இப்பிரபஞ்சம் பரமாத்மஸ்வரூபத்தில் மறைந்து விடும். சிநேகிதம், சண்டை, ஆசை இவைபோன்ற உலக விவகாரங்களில் பரமாத்மா மறைகிறான். பரமாத்மாவைப்பார்த்தால் இந்தக்காமக்குரோதங்கள் மறையும், உலகமும் மறையும்.

இந்த அருளைப்பெறுவதற்கு நேராகக்கடவுளை தரிசனம் செய்வது வெகுகடினம். கடவுளைக்கண்டு ஆனந்தித்த மகான்களை நாம் காணலாம். உண்மையில் உலகத்தையே கடவுளாகப் பாரக்கின்றவனே கடவுள். தங்கத்தில் பல விக்ரஹங்கள் ஏற்படுகின்றன ஆனால் எல்லாம் தங்கமே. காரணத்தை நாம் காண வேண்டும். காரியமாகப்பார்ப்பது பொய். உலகம் பரமாத்மாவால் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் கருணை வள்ளல், கிருபா சமுத்திரம். ஆகவே உலகைக் கடவுளாகப்பார்த்தால் எப்பொழுதும் கசக்காது, துக்கம் ஏற்படாது, உலகத்தை பரமாத்மா தரிசனமாக உணர்ந்தால் கசப்பும், துன்பமும் மறையும். இந்நிலை அடைந்து ஈச்வரனைக்கண்ட தாயுமானவர் போன்றவர் நமக்கு தங்கள் அனுபவங்களை அருளியுள்ளார்கள். அவர்கள் பாடல்களை நாம் பாடி அனுபவித்தால் அவர்களுடன் நமக்கு சம்பந்தம் ஏற்படும்.

### வயதான பின் ஏங்கவேண்டாம்

வயதான பிறகு கடவுள் உணர்ச்சி அநேகருக்கு உண்டாகக்கூடும். நமக்கென்று ஒரு காரியமும் செய்து கொள்ளவில்லையே என்று அப்போது அவர்கள் மனது ஏங்கும். தோத்திரங்கள், உண்மையை அறிவிக்கும் பாடல்கள் போன்றவைகளைக் குழந்தைப் பருவத்தில் சொல்லிவைத்தால் பின்னராவது அவை உபயோகப்படும்.

### ஹிருதயம் அவன் இல்லம்

ஹிருதயம் என்றபொருளுக்கு 'அவன் இல்லம்' என்ற உணர்வு ஏற்பட வேண்டும். அந்த இருதய பீடத்தில் பரமனை ஏற்றிவைக்க

வேண்டும். நமது தேகம் ஒரு தேவாலயம் போன்றது. அக்ஞானத்தை அகற்றிவிட்டால் நம் இருதயமும், தேகமும் அவனது இல்லமாக மாறி விடும். நமது இருதயம் பரமனுக்கு உரித்தானது. அதில் காமத்தையும் குரோதத்தையும் ஏற்றிவைப்பது அபசாரம். அதில் பரமனை உட்காரவைக்க நமக்கு சகாயம் செய்யக்கூடியவர்கள், பரம பக்தர்களான மாணிக்கவாசகர் போன்ற பெரியோர்களும் அவர்கள் பாடல்களுமே, தெய்வீக உணர்ச்சிகளை ஊட்டும் இப்பாடல்களை குழந்தைகளுக்கு போதிக்க வேண்டும்.

## குழந்தைகளுக்குப் பயிற்சி

நம் குழந்தைகளுக்கு இவற்றை கற்பிக்கவேண்டும். இதுவே நாம் அவர்களுக்குச் செய்யும் பெரிய உதவி. இந்த மூலதனத்தை நாம் அவர்களுக்கு அளிக்காவிடில் அவர்கள் நம்மை சபிப்பார்கள். நம் நாட்டில் ஆஸ்திகம் மறைந்து வருகிறது. தெய்வ உணர்ச்சி குறைந்து வருகிறது. தெய்வ நம்பிக்கை குறைவதால் நாட்டில் துன்பங்கள் மலிகின்றன தெய்வீக உணர்ச்சி ஊட்ட கொஞ்சிப் பேசும் குழந்தைப் பருவத்திலேயே இப்பாடல்களை புகட்ட வேண்டும். இன்று நம்நாட்டில் துரதிஷ்டவசமாக குழந்தைகள் படிக்க ஆரம்பித்ததுமே காலத்தை வளர்க்கக்கூடிய சினிமா படங்களைப் பார்க்கவும் துவேஷத்தை வளர்க்கும் கீழ்த்தரமான பத்திரிகைகளைப் படிக்கவுமே நேரிடுகிறது. இத்தகைய பழக்கம் ஏற்படுவதற்குமுன்னமே மகான்களின் அன்பு ஒழுகும் குளிர்ந்த வாக்குகளை குழந்தைகளுக்கு கற்பிக்கவேண்டும். புனிதமான மார்கழிமாதத்தில் திருவெம்பாவை திருப்பாவை பாடல்களைப் பாடிக்கொண்டு கிரிபிரதக்ஷணம் செய்ய வேண்டும் இம்மாதிரி முயற்சிகள் வெற்றிபெற பிரசாரம் வேண்டும். இதற்காகத்தான் தமிழ் நாடு முழுவதும் ஆங்காங்கு திருவெம்பாவை – திருப்பாவை மகாநாடுகள் நடத்துவதற்குமுயற்சி செய்யப்பட்டு வருகிறது.

## வேதம் நிறைந்த தமிழ் நாடு

திருப்பாவை வைஷ்ணவ பிரபந்தங்களின் சாரம் திருவெம்பாவை சைவ திருமுறைகளின் சாரம், இவ்வியகத்துக்கு விதைபோட்டால் இவை இரண்டினாலும் போற்றப்பட்டுள்ள வேதங்களும் வேதத்தின் ஆறு அங்கங்களும் வளரும், தமிழ் வளர்ந்தால் வேதமும் வளரும் வேதமனைத்திற்கும் வித்தாகும் கோதைத்தமிழ்என்று வைணவர்கள் கூறுவர். வேத விழிப்பொருள் என்று தமிழ்ச்சமய நூல்களை மாணிக்கவாசகரும் கூறியுள்ளார். இத்திருப்பாவை திருவெம்பாவை போன்ற நூல்களை பிரசாரம் செய்தால் இவைகளுக்கு அஸ்திவாரமாக உள்ள வேதமும் வளரும். வேதம் நிறைந்த தமிழ் நாடு என்றபேச்சும் உண்மையுள்ளதாகும்



இவ்விரண்டு நூல்களுக்கும் கருத்து ஒற்றுமையிருக்கிறது. ஸ்ரீ பாகவதத்தில் கோபிகைகள் காத்தாயாயினியை (துர்க்கை) பிரார்த்தித்த முறையை அனுசரித்துத்தான் இவ்விரு பாவைகளும் ஏற்பட்டுள்ளன. சிறப்பாக திருப்பாவை ஹரியையும், திருவெம்பாவை ஹரனையும் போற்றுவதுடன் பொதுவாக இந்த இரண்டு பாவைகளும் ஜகன்மாதாவான அம்பாளின் தோத்திரமாகவும் கருதலாம். ஆகவே ஹரிஹரன் அநுக்கிரஹமும், ஜகதாம்பிகை அநுக்கிரஹமும் இப்பாடல்களின்மூலம் நமக்குக் கிடைக்கும். இப்பாடல்களின் நோக்கம், தேங்கிக்கிடக்கும் நமது தெய்வீக சக்திகளை தட்டி எழுப்புவது தான் நம் தேகத்தில் அநேக சக்திகள் இருக்கின்றன. அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் உள்ளது என்பார்கள். இச்சக்திகளை நாம் வளர்க்க முடியும். இதற்கான வித்துகள் நம்மிடம்உள. ஆனால், அவை செடி மரங்களாக வளரவில்லை. அவைகள் பூரணத்துவம் அடைய இப்பாடல்கள் நம்மை தூண்டுகின்றன. பரஸ்பர சக்திகள் ஒன்றை ஒன்று தட்டி எழுப்பும் முயற்சிகளை இப்பாடல்கள் விவரிக்கின்றன.

சைவம், வைணவம் இவைகளுக்கு மூலமான வேதங்கள், வேதாந்தங்கள் இவைகளனைத்தையும் சம திருஷ்டியுடன் பார்க்கவும் கடவுள் வழிபாட்டில் ஒற்றுமையை வளர்க்கவும் இத்திருப்பாவை திருவெம்பாவை இயக்கத்தை நாடெங்கும் பரப்ப இத்தகைய மகா நாடுகளை ஆங்காங்கு கூட்டி, முயற்சி வெற்றிபெறச் செய்யவேண்டும்.



# நானும் எனது குருநாதரும்

[அ. இராமசாமி ஜோகூர்பாரு மலாயா]

நடமாடும் தெய்வமாகிய எனது குருநாதர், ஏகாதசி விரதம் இரு—என்று உபதேசிக்கிறார். வயிறு நிறைய சாப்பிட்டவர்களுக்கு ஏகாதசி விரதத்தை நினைத்தாலே பசிக்கிறமாதிரி தோன்றும். அவ்வளவு கடினமான ஏகாதசி விரதம், என் வாழ்விலே புகுந்த விதம் சொல்கிறேன்.

சுமார் ஏழு வருடங்களுக்கு முன் எனக்கு விரதம் இருப்பதிலே நம்பிக்கை கிடையாது. யாராவது விரதத்தைப்பற்றி சொன்னால், ஆத்மாவே தெய்வமாகவும் சரீரமே கோயிலாகவும் இருக்கும் போது அதை பட்டினி போட்டு வருத்திவிட்டு, பிறகு எந்த சுவாமியைக் கும்பிடுவது? வயிறு பசித்து இருக்கும் ஒருவன், தெய்வத்தை அமைதியாக எப்படி வணங்கமுடியும்?" இதை நான் ஒரு போதும் ஒப்புக்கொள்ளமாட்டேன். பரிபூரணமாக உணவருந்திய பின் தான், நான் சுவாமி கும்பிடுவேன் என்று சொல்வது வழக்கம். விரதத்திற்கும் எனக்கும் அவ்வளவு வேற்றுமையாக இருந்தகாலம் அது.

நான் கல்யாணம் செய்து வெகுகாலம் ஆகியும் புத்திரப் பேறு இல்லாமல் இருந்தேன். என்னைக்கண்டவர்கள், உங்களுக்கு கல்யாணமாகிவிட்டதா? என்பார்கள் ஆம்! என்றுசொல்வேன். குழந்தைகள்? இந்தக்கேள்வி என் மிருதுவான இருதயத்தை ஊசி கொண்டு குத்தினதுபோல் இருக்கும். குழந்தை இல்லை, என்ற வார்த்தை வாயில் வரலாமா? "பிள்ளையில்லாத பாவி" என்று உலகம் இகழுமே! அதனால் ஏக்கமே குடிகொண்டவன் ஆனேன்.

குழந்தைப்பேறுக்காக ஒரு பெரியாரை நாடினேன் அவர் ஒன்பது வெள்ளிக்கிழமை தம்பதிகள், உபவாசம் இருந்து கடவுளைவழிபடச் சொன்னார்.

உபவாசம் இருந்தோம். கடவுளை வணங்கினோம். என் இஷ்ட தேவியின் அம்சமாக பெண்குழந்தை பிறந்தது. அதிலிருந்து உப



வாசத்தில் எனக்கு நம்பிக்கை உண்டாயிற்று. ஆயினும் விரதம் இருக்காமலே காலம் கடத்தி வந்தேன்.

மூன்று வருடம் ஓடியது.

சில முதலாளிப் பாவிகள், வேலைக்காரர்களுக்கு ஓய்வு கொடாததைப்பற்றி ஆத்திரம் கொண்டேன். தெய்வத்திற்கு ஆதாரமாய் இருக்கும் என் வயிற்றின் உறுப்புக்களை மறந்தேன்.

உணவின் ஆசையால் வயிறு கொள்ளும் அளவு உண்ணுவேன். குண்டன் போல் பெருத்தேன். காமவெறி கொண்டு தவித்தேன், ஆணும் பெண்ணும் நகைக்கும்படி நடந்தேன். வலிமையற்ற அறிவினால் காமத்தை அடக்கிவிடப்பார்த்தேன். நான் அடைந்த தோல்விக்கு கணக்கில்லை.

காற்று அடித்த பந்தை தண்ணீருக்குள் அமுக்கினால், கையை விட்டதும் அது வேகத்துடன் மேலோங்கி வருமல்லவா?

உணவினால் திமிர்கொண்ட என் ஐம்புலன்கள், அவித்ய அகங்காரம் கொண்டு ஆடின. எனக்கு கிடைத்த சூழ்நிலையைப் பற்றி கொடுமையாகக் குறை கூறினேன், தலைவிதி, தலைவிதி. என்று தலையில் அடித்துக்கொண்டேன். துன்பமாகிய சுமையைத் தாங்க மாட்டாமல் மனமாகிய எருது தத்தளித்தது. ஒரு சிறிது நேரங்கூட அமைதியில்லாமல் என் வாழ்வு எட்டிக்காய் போல கசந்தது.

ஒரு நிமிஷத்தில் கொல்லும் வாய்வு நோய், என்னை அடிக்கடி பயமுறுத்தியது. நோய் தரும் துன்பம் சகிக்க முடியவில்லை. டாக்டரிடம் போனால் அவருக்கு கொடுப்பதற்கு என்னிடம் பணம் இருக்காது. இதனால் நான் அடைந்த சிரமம் கொஞ்சம் அன்று.

ஏகாதசி விரதம் இரு. என்று எனதருமைக்குருநாதர் எனக்கு உபதேசித்தார். அதிலிருந்து ஏகாதசி விரதம் இருந்து வருகிறேன்.

உபவாசம் வேறு எனது குருநாதர் வேறு என்றுநினைப்பதற்கு இடமில்லை, எனது குருநாதரின் திருவடி சக்தி இந்த உபவாசத்திலே நிறைந்திருக்கிறது.

என் இஷ்ட தேவியாகிய ஆனந்த சரஸ்வதியும் குருநாதர் சிவானந்த சரஸ்வதியின் திருவடி சக்தியும், குடிவாழும் இந்த சரீரமாகிய கோயிலைத் தாங்கி நடத்தும் வயிற்றுச் சுரப்பிகளுக்கு பரிபூரணமாக ஓய்வு கொடுக்கிறேன்.

என் அருட் குருநாதரின் உபவாசமுறையினால், தொந்தரவு தரும் காமனின் கன்னத்தில் நன்றாக அறை கொடுக்கப்படுகிறது, அட்டகாசம் அடங்கிய காமன் சாகாமல் செத்தவன்போல் தோன்றுகிறான்.

அடங்காத குதிரைகளாகிய ஐம்புலன்கள் ஐந்தும் நான் கொடுக்கும் உபவாச சவுக்கடியினால் சாந்தம் அடைந்து எனக்கு திருப்தியாக நேர்வழி செல்கின்றன.

முன் எனக்கு பொல்லாத சூழ்நிலையாகத் தோன்றிய அனைத்தும் இன்று எனக்கு என் இஷ்டதேவியும் குருநாதரும் அருள் சுரந்துகொடுத்த வரப்பிரசாதமாகத் தோன்றுகின்றன.

நான் இருக்கும் நிலையிலே இன்பம் காண்கிறேன். துன்பம் தோன்றினால் துன்பமே! வா! வா!!...என்தலைமேல் வந்து உட்காரு தாங்குகிறேன் என்று மனமார அழைக்கிறேன்.

என் வாழ்வே தவவாழ்வுதானே! துன்பம் என்று கசந்தால் அது எனக்கு எவ்விதம் பொருந்தும்?

இமயமலைக் காட்டிற்கு ஓடினால்தான் தவவாழ்வு வாழலாம் என்று உறுதிப்படுத்திய நான் எந்த இடத்தில் இருந்தாலும் தவவாழ்வுக்கு இடம் உண்டு என்பதை நிதரிசனமாய் உணர்கிறேன்.

எனதருமைக்குருநாதர் எனக்கு உபவாசம் போதித்து வியாதி அரக்கனிடமிருந்து என்னை விடுவித்துவிட்டார்.

பட்டினி பரமஔஷதமென்பது பழமொழியல்லவா?

உபவாசத்தினால் நான் அமைதியுடையவனாகி சத்வகுணத்தை துணைக்கொண்டு வருகிறேன். அதனால் என் இஷ்டதேவியும் எனதருமைக் குருநாதரும் என் நெஞ்சைவிட்டுப் பிரியாமல் இருக்கிறார்கள்.



# சிருட்டி மனிதன்.

**(வீரைக்கவிஞர் கா. ந. நெல்லையப்பர்)**

நீண்ட, என் நிட்டையோகத்தினின்றும்—ஓர்மானசீக—ஆண்குழந்தை உடம்புருவத்தைக் கற்பனையினின்றும் பிறப்பித்தேன்.

பிறப்பித்த—அந்த ஆண்குழந்தை உடம்புருவில்—முன்னரே—கலந்து வைத்திருந்த—ஜீவ உயிரன்புப் பொருட்பகுதியை செலுத்தினேன். இந்நிலையில் என் ஒலிப்பொருளின் ஓர் அணுஒலிப்பொருளின் ஓர் அணுஒலிப்பொருளை—அந்தக் குழந்தையின் உயிரன்பு உடம்புப்பொருளில் இயங்கச் செய்தேன்.

உயிர்ப்பொருளும், அன்புப் பொருளும் ஒலிப்பொருளும்—மானசீகக் குழந்தை உடம்பு உட்பொருளோடு கலக்க—உயிருள்ள குழந்தை ஒலியொடு பரிணமித்தது.

சிறிது நேரத்தில் அந்த ஆண்குழந்தை—இயற்கையாகப் பிறந்த ஆண் குழந்தையைப் போலக், குவா. குவா, என அழத்தொடங்கிற்று.

என்னே! என் புலமையின் படைப்பு!—இத்தகைய புலமைத் திறம்தந்த இயற்கையன்னையை வாழ்த்துவேனாக.

---

முற்பக்கத் தொடர்ச்சி

எனது குருநாதரின் அருள்பெற்ற நான் வெகுவிரைவில் உபவாசத்தின் மகிமையை அறிந்துகொண்டேன்.

அன்பர்களே! இந்த உபவாசம் என்ற கனிரசம் எவ்வளவு இனிமையுள்ளது? என்பதை நீங்களும் கொஞ்சம் அருந்திப்பாருங்கள். சர்க்கரையின் இனிப்பைக்கண்டகுழந்தைகள்கையைக்கையை நீட்டுவது போல் நீங்களும் என்னைப் பின்தொடர்வீர்கள்.

குழந்தையின் அழுகுரலைக் கேட்டு என் உள்ளம் பூரித்தது. ஆண்வடிவோடு தோன்றிய —அக்குழந்தை —உலகியற் குழந்தைபோல வளரத் தலைப்பட்டது.

காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம் வருகை அம்புலி சிற்றில் சிறுபறை சிறுதேரென்னும் பத்துவகைப்பிள்ளைப் பருவங்களையும் கடந்து கல்வி கற்கும் கவினுறு—இளமைப் பருவம், எய்தியது—அந்த ஆண் குழந்தைக்குக் கல்வியைப் புகட்டி அறிவுளரச் செய்வித்தேன். குழந்தையும் கல்வித்திறமைபெற்று, காமுறும் கட்டழகுக் காளைப்பருவம் பெற்றது.

கல்வி யழகும் கலையழகும் காமுறும் கட்டழகும் ஒருங்கே கூடிய அக்காளையைக்கண்டு—வியப்படையாதார் யார்? காளைப்பருவமும் கட்டழகுப் பருவமும், கவின்பெறக் கூடிய அந்த ஆணழகன்—மணப்பருவமடைந்தான்.

அறிவும் அழகும் ஒருங்கே திரண்ட ஆணழகனை—அடையமுற்படுவதில் போட்டியிட்ட அணங்கினர் அளப்பிலர். அறிவும் அழகும் பெற்றுவிளங்கிய அவன் உறவையும் நட்பையும்பெற உல மக்கள் பெரிதும் விரும்பினர். நம் படைப்பு ஆண் மகனும் உலகப் பெருமக்களோடு அன்புற அளவளாவிப் பழகிவரலானான்.

பருவப் பெண்களெல்லாம் நம்கட்டழகனின் காதலைப்பெற ஆர்வமுற்றனர்.

இவன் யாரோ? இவன் பெயர் யாதோ? இவன் ஊர் யாதோ? என ஒருவரோடொருவர் உரையாடி அறியவிரும்பினர்.

கற்றோரெல்லாம் — சாமுத்ரக்க வல்லவனாக—நம் கட்டழகன் ஊர் மக்களிடம் அன்பும் உறவும் நட்பும் கொண்டு யாவரும் அதிசயிக்கத்தக்க முறையில் நடக்கத் தலைப்பட்டான்.

அவனையடைந்து இன்புற இயலுமா? என்று அயர்வும் சோர்வும் கொண்ட அணங்கினர் அநேகர்.

அவனது ஒழுக்கத்தைக்கண்டு அவனை மணந்து அவனோடு இல்லறம் இனிது துய்க்கலாமென்று எண்ணமிட்ட ஏந்திழையர் எண்ணிலர்.



காமனும் விரும்பும் கட்டழகனைக் காதல் மணம்செய்து களிப்புற வாழலாமென்று கருதிய கன்னியர் கணக்கிலர்.

அழகினுக் கழகுசெய்யும் அவனையடையலாமென, முயன்று, அம்முயற்சி வெற்றிபெறாது தோல்வியடைந்த தோகையர், சொல்லில் அடங்கார்.

கண்ணுக்கினிய அவனைக்காணலும் அவனோடு பேச்சுரையாடலும் பெருமையாகக்கொண்ட பேரணங்கினர் பலர். இத்தகைய எழில் நலம் படைத்த ஏந்தல்—தன்னந்தனியனாகக் கால் நடையாக உலவிவருங்கால்—தென்றல்மணம் கமழும் ஒருதண் பூஞ்சோலையையடைந்தான்.

சோலையென்றால் இது வலவோ? சோலையெனச் சிந்தித்தவனைச் சோலையின் இயற்கை யழகில் ஈடுபட்டான் சண்பகம் கமகமவெனவும் தளிர்பூந்தென்றல்—இனிது வீசவும், செருந்தி செம்பொன் மலர் சிதறிக்கிடக்கவும் கண்டு அவன் இளமையுள்ளம் இறும்பூதெய்தியது. சோங்கம் வேங்கை எனும் மரங்கள் ஒய்யாரமாகவும் கம்பீரமாகவும் ஓங்கி வளர்ந்து விளங்கும் காட்சி அவன் கட்புலனைக் கதுவச்செய்தது. சோலையில் அழகுற அமைந்த ஓர் பளிங்குமேடை.

அம்மேடையின் அதியற்புத சித்திரவேலைப்பாடு அவன்மனதை அடிமைப் படுத்திற்று. அந்தப் பளிங்கு மேடையிலமர்ந்து சற்றே இளைப்பாற எண்ணினான். வழிநடந்த—களைப்பையும் சோர்வையும் போக்கிக்கொள்ள—அந்தப் பளிங்கு மேடை தக்க வசதியளித்தது.

கோடையிலே—இளைப்பாற்றிக்கொள்ளும் வகைகிடைத்த குளிர்தருவே! எனக்கூறிக் கோங்கமரத்தின் குணத்தை விசேடித்துக் கூறினான்.

குளிர்ந்த கோங்கமரத்தின்—தருநிழலே!—எனநிழலில்அமர்ந்து களைப்பைப் போக்குவானான் "நிழல்கனிந்த கனி" இதுதானென்று அருகில்நின்றுகொண்டிருந்த ஓர் மாமரத்தினின்றும் ஓர் மாங்கனியைக் கொய்து—கனியைச் சுவைத்துச் சுவைத்துத்தேமதுரச் சுவையிற்றிளைத்தான்.

ஆ....ஆ.....இதென்ன! ஆரமுதமென்பது விண்ணுலகத்தில் தான் உண்டென்பார்கள். அந்த ஆரமுதம்—மண்ணுலக மாங்கனியிலும் அமைந்து கிடக்கின்றதே!—தெவிட்டா இன்பச்சுவை விருந்திற்கு—அமுதமும் தோற்குந் தோற்குமென்று சிந்தித்துக்கூறினான்.

உள்ளமெலாம்—உயிரெல்லாம்—உடம்பெல்லாம் தித்திக்கின்றதே—ஆம், ஆம். ஆரமுதமாங்கனியின் அருஞ்சுவைதான் என்று விம்மிதம் கொண்டவனாகி—ஆ இதென்ன?—விக்கலெடுக்கிறதே!—தாகவிடாய்கொள்கிறதே!.. ...எங்கே-நீர் நிலை! இச்சோலையிடத்துத் தேடுதல் கூடுமோ? எனத்தாகவிடாய் தீர்க்க நீர் நிலையை—தேடுவானானான்—அங்குமிங்கும் அந்த அழகிய சோலையிடத்தே!

ஆ...ஆ......கண்டேன் ஓர் நீரோடையை:—ஓடையிலுள்ளநின்ற தீஞ்சுவைத் தண்ணீரே!—எனத்தெளிந்த அந்த நீரோடையில் சான்றோன் கவியெனச் செல்லும்—தண்ணீர் ஒழுக்கைவியந்து வியந்து இருகையளாவக் கண்டமட்டும் பருகித்தாக வெப்பம் தீர்ந்தான்—நம் தமிழ்ப்பெருஞ் செம்மல்.

தாகவிடாய் தீர்த்தபின்—மீண்டும் நம் இளவல்—பளிங்கு மேடையை வந்தணைந்தான்.

(தொடரும்)

---

# ஸ்ரீ இராமகிருஷ்ணர் அருள்வாக்கு.

ஆழ்மான கடலில் முத்துக்கள் இருக்கின்றன. ஆனால் அவற்றை எடுப்பதற்கு ஒருவன் எல்லாவித ஆபத்துக்கும் துணியவேண்டும். கடலில் ஒருதரம் மூழ்கியதில் உனக்கு முத்துக்கள் அகப்படாதுபோனால் அக்கடலில் முத்துக்களே இல்லையென்று தீர்மானித்துவிடாது. அடிக்கடி மூழ்கு: கடைசியில் உனக்குப் பலன் கிடைக்கும். உலகத்தில் ஈசுவர தரிசனமும் அப்படிப்பட்டதேயாம். அவனைக் காணவேண்டுமென்று நீ செய்யும் முதல் பிரயத்தனம் பயனற்றதாகுமானால் நீ அதைரியப்படக்கூடாது. அம்முயற்சியில் இன்னும் சிரமப்படு கடைசியில் நீ ஈசுவரனை நிச்சயமாகக் காண்பாய்.



## திருமுறைக்காட்சிகள் (7)

...[முந்து]...

# நீதியால் வாழமாட்டேன்.

நாலுபேர் சொன்னபடி நடந்தால் அந்தப்பிள்ளைக்கு இந்தக் கதி வந்திருக்குமா என்று அங்கலாய்த்தாள் ஒருதாய். அந்த நாலுபேர் யாவர்? என்பது ஒரு கேள்வி. ஊரில் நாலு பெரிய மனிதரைத்தான் தாய் குறிப்பிட்டிருப்பாள் என்பது பலர் கருத்து. நாலுபேர் என்ற சொற்றொடரே உண்மையில் சமயாசாரியர்கள் நால்வரிலிருந்தே தோன்றியது. நால்வர் என்றால் அன்று தொடக்கம் இன்றுவரை அவர்களைக் குறித்தே வழங்கிவருகின்றது. அவர்களுக்கும் அந்தத் தாய் சொன்னதற்கும் என்ன தொடர்பு இருக்கின்றது என்பது கேள்வி? இன்றும் சமயப் பண்பாடுள்ள குடும்பங்களிலே திருமுறைகளில் கயிறு போட்டுப்பார்த்து ஒரு விஷயத்தைச் செய்யலாமா செய்யக்கூடாதா என்று தீர்மானிக்கும் வழக்கம் உண்டு. நம்பிக்கையைப் பொறுத்துப்பலர் இதில் பலன் அடைந்துள்ளதாகக் கூறுகின்றார்கள். இப்படிப்பட்ட தர்மசங்கடமான நேரங்களிலே நால்வர்களும் உதவி செய்வதோடு அமையாது அவர்களது வாழ்க்கைமுறையும் திருவாக்குகளும் மக்களுக்கு நீதியோடு வாழ வழிகாட்டின. நீதி என்ற சொல்லுக்கு இறைவன் என்ற பொருளும் உண்டு. மணிவாசகப்பெருந்தகை ஓரிடத்தில் "பங்யத்து அயனும் மாலறியா நீதியே" என்று விளிக்கின்றார். இறைவன் வேறு, வாழ்வு வேறு அல்ல. இவையெல்லாம் நீதியுள் அடங்குவனவே, "மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற அடி ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. மூலப்பொருள் ஒன்று என்பதும் அதனோடு மனித வாழ்வு இயைந்தது என்பதும் மூலப்பொருளுக்கும் மனிதவாழ்வுக்குமுள்ள தொடர்பைச்சைவநீதியாசக் கண்டான் என்பதும் பண்டைத்தமிழன் வாக்காகும். இறைவன் மக்களினத்திற்குவகுத்த வழி எதுவோ? சத்தியம் எதுவோ? அதுவேசைவநீதியாகும். சைவஒழுக்கத்தில் தவறாது நின்றவர் நாவுக்கரசர். இடையிலேசமண நீதியால் ஏமாற்றப்பட்டவர். பின்புஉண்மை தேறிஉறுதி பூண்டவர். எமது வாழ்க்கையை எல்லாம் சைவக்கண்ணாடி

கொண்டு பார்த்தார். நாம் மிகமிகப் பிற்போக்கான நிலையிலே காணப்பட்டோம். எங்கள் குறைகளையெல்லாம் தன் தலையிலே சுமத்தினார். உடனே

நீதியால் வாழ மாட்டேன்,

என்று தொடங்கினார்,

எங்கள் முன்னோர் எங்கள் உள்ளங்களையெல்லாம் மிகமிக நன்றாக அறிந்தவர்கள். அதனால்தான் எங்கள் உள்ளங்களைக் கள்ளைக் குடித்த குரங்கிற்கு உவமையாகக் கூறினார்கள். கோயில் வழிபாடு என்றும், சத்சங்கம் என்றும், விரததினங்கள் என்றும் பலப்பல வகுத்தார்களே! ஏன்? நிலையற்றதை நோக்கி ஓடும் மனத்தை நிறுத்தி உண்மைப் பொருளை அறியும் முகமாகத் திருப்பி விடுவதற்காக. நல்ல சூழலிலே வாழும்போது நல்லெண்ணம் உதிக்கிறது. தகாத் சூழலிலே தகாத எண்ணம் உதிக்கிறது. தகாத எண்ணம் உதிக்கும்போது மனத்தை அறிந்தபெரியோர் அடக்கிக் கொள்வர். "மனம்எனும்ஓர் பேய்க்குரங்குமடைப்பயலே நான் மற்றவர்போல் என நினைத்து மருட்டாதே கண்டாய்" என்று பயத்தினாலோ, "நிலை பெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா" என்று நயத்தினாலோ புத்திமதி கூறி மனத்தைப் பண்படுத்திக் கொள்வர் பெரியோர். சிறியோரிடத்து உதிக்கும் தகாத எண்ணங்கள் செய்கைகளாகமாறி அவர்கள்வாழ்வுக்கே உலை வைத்துவிடுகின்றன. அடிக்கடி எமது சேர்க்கையை நல்லவர்களோடு வைத்துக் கொள்வதினாலே தகாத எண்ணங்களுடைய வலிமைபடிப்படியே குறைந்து போகின்றது. ஞானிகளுடைய மனோநிலை தைலதாரை போல் இருக்கும். என்று பெரியோர் கூறுவர். அவர்களுடைய மனம் இறைவனுடைய அடியிலே இடைவிடாது பற்றியிருக்கும். தைலதாரை இடையீடில்லாது ஒழுகுவது போன்று அவர்கள் உள்ளமும் இறைவனடியைத் தவிரவேறு ஒன்றையுஞ் சிந்திப்பதில்லை. எங்கள் மனமோ மழைத் துளியைப்போன்றது; இடையிடையேதான் இறைவனிடத்திற்குச் செல்கின்றது. அதுவும் மரத்தில் உள்ள மழை நீர் காற்று வீசும் போதுதான் நிலத்தை நோக்கி வருகிறது. அதுபோலவே நாமும் கஷ்டமுறும்போது தான் கஷ்டத்தால் தாக்குண்டு இறைவனை நினைக்கின்றோம். ஆதலால் நாம் வெளித்தோற்றத்திலே எவ்வளவு பரிசுத்தராகவாழ்ந்தாலுங்கூட உள்ளத்திலே அடிக்கடி மாசு ஏற்



பட்டுக்கொண்டே இருக்கிறது. இதை நினைந்தே

நித்தலுந் தூயேனல்லேன்,

என்றார். எப்பொழுதும் எந்த நிமிஷமும் எந்தச்செக்கனும் நான் தூயனாய் இருக்கவில்லை என்று ஏங்குகின்றார்.

பண்டைப் பெரியோர் காட்டிய சைவநீதியின்படி வாழ்ந்தேனில்லை. தினமும் பரிசுத்தனாகவும் வாழ்ந்தேனில்லை. எத்தனையோ நூல்களையெல்லாம் கற்றேன். நீதி நூல்கள் சமய நூல்கள் உலக நூல்கள் எவற்றுக்குமே குறைவில்லை. எனது வீட்டில் எத்தனை அலுமாரிகளில் புத்தகங்கள் கிடந்து தூங்குகின்றன. எனது வீட்டில் தட்டுப்பட்டு வீழ்ந்தால் புத்தகத்தில் அல்லவா தட்டுப்பட்டுவீழ வேண்டும். ஒரே புத்தகத்தில் பத்துவிதமான பதிப்பு இருந்தால் அத்தனையும் வாங்கியல்லவா வைத்திருக்கின்றேன் திருக்குறளுக்கு எழுதிய உரைகள் பத்தும் பக்குவமாகத் தேடி வைத்திருக்கின்றேனே. எத்தனை நண்பர்கள் எனது வாசிகசாலையை வாயாரப் புகழ்ந்துள்ளார்கள். திருவாசகத்திற்குப் போப் ஐயர் எழுதிய ஆங்கில மொழிபெயர்ப்பைப்படித்து எத்தனை நாள் மகிழ்ந்துள்ளேன். எத்தனையோ நூல்களைப் பிறர் புகழப்படித்தேன் பிறர் புகழப்பேசினேன். பிறர் புகழ எழுதினேன். பயன் ஒன்றுமில்லை. ஏன்? ஒருவார்த்தையாவது உணர்ந்தேனில்லை. என்னிலும் பார்க்கத் தாயுமானவர் சொன்ன கல்லாதவர்கள் எவ்வளவு நல்லவர்கள்! நல்லவர்கள்!! ஆதலால் தான்

ஓதியும் உணரமாட்டேன்

என்கின்றார்.

ஓதி உணர்ந்தவன் சைவநீதியின்படி வாழ்ந்திருப்பான். நித்தலுந் தூயனாய் வாழ்ந்து வருவான். உண்மைப் பொருள் எதுவோ, அதனை உள்ளத்தில் வைத்திருப்பான். விடியுமுன் எழுந்தோம். வெளுக்குமுன்வீட்டை விட்டோம். உடலும் மனமும் சோர்ந்திட உழைத்தோம் எதற்காக? இந்த உடலுக்காக. ஆயிரக்கணக்கான பேருக்குமுன் பல்லிளித்து நின்றோம். எதற்காக? அரைக்காசுவரும் படிக்காக. இன்றுநாளுங் கிழமையுமாக இருக்கின்றதே. கோயிலுக்குப் போய் வந்தால் என்ன என்று பெரியோர் கூறினர். இன்று மிகமிக வேலை. எல்லாம் நாளைக்குப் பார்த்துக்கொள்வோம். இப்படி எமதுள்ளே அந்தர்யாமியாய் இருந்திடுகின்ற இறைவனை ஒரு

நாளைக்கு ஒருதரம் ஒரு நொடிப்பொழுதேனும் எண்ணிடவோ நேரமில்லை. உலகத்திலுள்ள என்னென்னவெல்லாமோ இருக்குமோ நமது உள்ளத்தில் இடமிருக்கிறது. இறைவனுக்கு மாத்திரம் எமது இருதயத்தில் ஒரு மூலையில்தானும் இடமில்லை. இருதயம் என்ற சொல்லுக்கே இறைவனை உணர்தல் என்பது பொருள். அவன் இதயம் படைத்தவன் என்றால் சைவநீதியை உணர்ந்தவன். இருதயத்தில் இறைவனுக்கு இடம் அளித்தவன் என்பது கருத்து. நாமும் தான் பலமுறை எமது இருதயத்தில் இறைவனுக்கு ஒரு இடம் எடுத்துக்கொடுப்பதற்காக முயன்றிருக்கிறோம். அம்முயற்சி எல்லாம் இன்றுவரையில் பாழாய்ப் போய்விட்டது: காரணம் இந்த குரங்கு மனந்தான். எவ்வளவோ கஷ்டமுற்று இருதயத்தின் மூலையிலே ஓரிடந்தேடிக்கொடுத்து விட்டேன் என்று சந்தோஷமுற்றிருக்கும் சமயம். வேறு எத்தனையோ பேர்களை அழைத்து வந்துவிடும் இந்த மனம் அந்த இடத்திற்கு அங்கிருந்த இறைவன் ஓர் புன்சிரிப்போடு மெல்ல நழுவி விடுவார். எத்தனை முறைகளில் எல்லாம் நாம் அவரை எமது இதய இல்லிற்கு அழைத்து இப்படி அவமரியாதை செய்துள்ளோம். நாமாக அவரிடம் சென்று வேண்டி அழைத்து வந்து அவருக்கென்று இட்ட ஆசனத்தை-அழைப்பு அனுப்பாமலே எம்மைக் கெடுக்க வந்த காலிகளுக்கு கொடுத்திருக்கிறோம். இந்தச் சந்தர்ப்பங்களில் எல்லாம் இறைவன் எம்மேல் கொண்டகருணையினால் ஒருபுன்முறுவலைத்தவிர வேறு யாதுதான் செய்தான். இதை உணர்ந்தேதான் நாவுக்கரசுப் பெருந்தகை

உன்னையுள் வைக்க மாட்டேன்

என்றார். இன்னோரிடத்தில் அவரே

"மன்றத்துப் புன்னைபோல மரம்படுதுயர மெய்தி ஒன்றினால் உணர மாட்டேன் உன்னையுள் வைக்க மாட்டேன்"

என்று மிக மிகத் துன்பப்படுகின்றார்,

இறைவன் அகண்ட சோதி மயமானவன். அச்சோதியினின்று பிரிந்த சுடருள்ளும் நிறைந்துள்ளான். அவன் இல்லாத இடமே இல்லை. சைவநீதியாக எங்கும் நீக்கமற நிறைந்துள்ள இறைவனே! யானோ நீதியால் வாழ்ந்தேனில்லை, நித்தலுந் தூயவனாக இருந்தேனுமில்லை; ஓதியும் உணர்ந்தேனில்லை; உன்னை உள் வைத்தேனில்லை இப்படிப்பட்டயான் ஒன்றைத்தேடித்தேடி மிக வருந்தினேன்.



வாழ்வில் ஒரு முறையாவது நினது பரிசுத்தமான பாதங்களைக் காணவேண்டும் என்பதுதான் அந்த ஆசை,

கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்

என்று வள்ளுவர் கல்வியின் பயன் இறைவனது பாதந்தொழுதல் என்றல்லவா கூறியிருக்கின்றார். நினது திருப்பாதங்களை ஒருமுறை கண்டுவிட்டேன் ஆனால், நீதியோடு வாழும் நிலையை அடைந்துவிடுவேன்; நித்தலும் தூயனாகி விடுவேன்: ஓதியதை உணர்ந்துவிடுவேன்; நின்பாதத்தை அடிக்கடி நினையுந்தோறும் உன்னை உள் வைக்கும்பழக்கத்தையும் கைக்கொண்டுவிடுவேன். திருவதிகை வீரட்டானத்திலிருக்கும் எம்பெருமானே, உலகிற்கெல்லாம் ஆதியாய் உள்ளவரே உமது திருப்பாதத்தை காணும் பொருட்டு மிகமிக துன்பமடைந்து போனேன். ஆதலால் நுமது திருப்பாதத்தைக்காட்டி எனது துன்பத்தைப் போக்கியருளுக.

*நீதியால் வாழ மாட்டேன் நித்தலுந் தூயேனல்லேன்*
*ஓதியும் உணர மாட்டேன் உன்னையுள் வைக்க மாட்டேன்*
*சோதியே சுடரே உன்றன் தூமலர்ப் பாதங் காண்பான்*
*ஆதியே அலந்து போனேன் அதிகை வீரட்ட னீரே.*



## ஸ்ரீ இராமகிருஷ்ணர் அருள்வாக்கு

எண்ணெய் இல்லாது போனால் விளக்கு எரியாது. அதுபோன்று. ஈசுவரனில்லாமற்போனால் மனிதன் ஜீவித்திருக்க முடியாது.

# ஸ்ரீ கதிரைமணி மாலை

*பரமஹம்ஸதாசன்*

அரக்கர் கொடுமை யற்றிடவும்
அமரர் மகிழ்ச்சி யுற்றிடவும்
பரமன் நெற்றிக் கண்திறந்து
பார்க்க, பைம்பொற் சுடர்ஆறு
சரவ ணப்பூம் பொய்கைதனைச்
சாரக் கமலத் தோராறு
அருமைக் குழந்தை யுருத்தாங்கி
அமர்ந்தே கதறி யழுதிட்டாய்! [24]

கார்த்தி கைப்பெண் அறுவர், இதைக்
கண்டுவிரைந்து தூக்க, அதைப்
பார்த்த உமையாள் ஆசையுடன்
பற்றி அணைக்க, ஒருடலில்
சீர்த்தி பொலியும் அறுமுகனாய்த்
திகழ்ந்தாய்! சிவனார், "இவன் உனது
கீர்த்தி மைந்தன்" என அன்னை
கிளர்ந்தே அருட்பால் தரவளர்ந்தாய்! [25]

உண்ணா முலைத்தாய் பிடித்தமுதம்
ஊட்டச் சிதறிப் பெருங்கோலம்
பண்ணும் குறும்பைக் கண்டன்னை
பயந்துள் ளணைத்துப் பக்குவமாய்ப்
"கண்ணல் லோ,கண் மணியல்லோ
கனியல் லோ,நீ" எனத்தடவி,
அண்ணாந் திறைஞ்ச, இரங்கி,உண
வருந்தும் குழந்தைப் பெருமானே! [26]

சிந்தைக் கினிய எழில்வடிவில்,
சிறுகால் தண்டைச் சிலம்பொலிக்க
வந்தே, பரந்த மடியமர்ந்து
மாசில் மழலைத் தமிழமுதைச்
சிந்திப் பரமன் உளங்களிக்கச்
செய்த குழந்தைச் செல்வா!இம்
மைந்தர்க் கிரங்கி ஒருமொழிநீ
வழங்கில், மகிழ்ந்து போவேனே? [27]



ஆனை முகத்தான் துதிக்கையை
அங்கை முழம்போட் டளக்க,அவன்
நாணிச் சினந்து, அம்மையப்பர்
நடுவில் உரைக்க "அண்ணனிடம்
ஏனப் பா,இக் குறும்புசெய்தாய்"
எனலும், அவர்கட்(கு) என்தலையைத்
தான்மட் டிலும்எண் ணிடலாமோ?
என்ற குழந்தைச் சண்முகனே! [28]

சிற்றில் அமைக்கும் சிறுமியரைச்
சிரிப்பால் மயக்கி, அவர்காணா(து)
எற்றி யழித்துக் குறும்புசெயும்
இன்பக் குழந்தை யெம்மானே!
பற்றி யணைத்துன் பதத்தேனைப்
பருகிக் களிக்க, எனதுமனச்
சிற்றில் அழிக்க வாராயோ?
செல்வக் கதிரைச் செழுங்கனியே! [29]

அரிதிற் கிடைத்த கனிபெறத்தம்
அண்ணர்க் கெதிராய் மயிலேறி
ஒருசுற் றினிலே உலகைவலம்
உவந்தும், கனிகிட் டாமையினால்,
கருவிச் சினந்தோர் இடமுறைய,
"கண்ணே, அமுதே, பழம்நீயே,
வருவாய்!" எனப்பெற் றோர்வாழ்த்த
மகிழ்ந்தாய்! என்முன் வாராயோ: [30]

அஞ்சு முகத்தால் அசுரர்தமை
அடக்கித் தம்கீழ் ஆட்கொண்டாய்
அஞ்சு முகத்தால், குறமானை
அணைத்துப் பிடித்தே ஆட்கொண்டாய்
அஞ்சு முகத்தால், அடியர்வினை
அழித்துத் தடுத்தே ஆட்கொள்ளும்
அஞ்சல் முகத்தாய்! எனதுமனம்
அடக்கி யாண்டால் ஆகாதோ? [31]

[தொடரும்)

# மஹாமகம்

[திரு. அ. கோபால்ஐயர்]

எல்லாவற்றிலும் ஒற்றுமையைக் காண்பது தான் ஹிந்து மதத்தின் சிறந்த முடிவு. நம் முன்னோர்களான முற்றுமுணர்ந்த முனிவர்கள் மனித சமூகத்திற்குத்தலைவர்களாக இருந்துவந்தார்கள் அவர்களது அனுபவ ஆராய்ச்சியின் பயனாக ஏற்பட்டதே சாஸ்திரம். அந்த சாஸ்திரமே நிரந்தரமான இம்மை, மறுமை சுகங்களை அளிக்கவல்லது. ஒவ்வொருவனுக்கும் தகுதி, நிலை இவைகளுக்கு ஏற்றவாறு ஒழுக்கங்களிலும் கடமைகளிலும் வித்தியாசம் உண்டு இருந்த போதிலும், சமுதாயம் என்று வரும்பொழுதும் எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஈசனது அம்சம் என்ற பேதமற்ற ஒற்றுமையைக்காணும் வாய்ப்பு ஏற்படுகிறது. இவ்வித வாய்ப்பை ஒவ்வொருவரும் அடைந்து அனுபவிக்க வேண்டும் என்ற நோக்குடனேயே நம் முன்னோர்கள் தேரும், திருவிழாக்களும் ஏற்படுத்தினார்கள்.

நம்நாட்டிலே அனேகபுண்ணியஸ்தலங்கள் உள்ளன. ஒவ்வொரு ஸ்தலத்திற்கும் புராணங்கள் உள்ளன. ஸ்தலமும், முனிவர்கள், ஞானிகள், பக்தர்கள் முதலிய மஹான்களின் வாழ்க்கையில் நெருங்கியதொடர்புடையனவாக விளங்குகின்றன. இவ்வித புண்ணிய ஸ்தலங்களில் கும்பகோணம் மிகமிகச்சிறந்ததாகும். ஒருசமயம் பிர்மதேவன் சிவபிரானிடத்துசென்றார், பலவாறு துதித்து. "ஈசா எனது கால அளவில் பகல் கழிந்து இரவு வரப்போகிறது. அதுசமயம் எங்கும் ஜலப்பிரளயம் ஏற்படப்போகிறதே, அப்பொழுது எனது படைப்புத்தொழிலுக்கு வேண்டிய மூலப்பொருள்கள் எல்லாம் அழிந்துவிடுமே, பிறகு நான் என்ன செய்வேன்? தாங்கள்தான் எனக்கு உபாயங்கூறி அருள்புரிய வேண்டும்" என வேண்டினார். அதற்கு ஈசன், "பிர்மனே! மண்ணில் அமுதத்தை விட்டுப்பிசைந்து ஓர் குடம் செய், அதில் அமுதத்தை நிரப்பு. உனது படைப்புக்கு வேண்டிய மூலப்பொருள்களையும் அதில்வை. பிறகு அக்குடத்தை மாவிலை, தேங்காய், கூர்ச்சம், பூணல் முதலியவைகளால் அலங்கா



ரம் செய், உயரமான இடத்தில் உறியின்மீது அதை வைத்துச் செல். பிறகு நாம் பார்த்துக்கொள்கிறோம்" என்றுகூறி அருளினார். பிர்மதேவரும் அவ்விதமே கும்பத்தைத் தயார் செய்து வைத்துவிட்டுத் தூங்கச் சென்றார். பிரளயம் வந்தது. எங்கும் தண்ணீர். நாடும், நகரமும், காடும், மலையும் மூழ்கின. பிர்ம தேவனது குடம் தண்ணீரில் மிதந்து சென்றது. காற்று வேகமாக வீசிற்று. குடத்தின்மேலுள்ள பூணல், கூர்ச்சம், தேங்காய், மாவிலைகள் கீழே வீழ்ந்தன. இவைகள் வீழ்ந்த இடத்திலிருந்தும் ஒவ்வோர் லிங்கங்கள் தோன்றின. முடிவில் இக்குடம் ஈசனது விருப்பப்படி மிகப் புனிதமான இடத்திலே வந்து தங்கியது. காற்றும் மழையும் நின்றது வெள்ளமும் குறைந்தது. பிர்மனுக்கும் பொழுது புலர்ந்தது. இதற்குள் ஈசன் குறவர் உருக்கொண்டு குடத்தை அம்பெய்து உடைத்தார். அக்குடத்திலுள்ள அமுதமானது எங்கும் சிதறிப் பரவியது இரண்டு இடங்களில் அதிகமாகத் தேங்கியதால் அவைகளுக்கு அமுதவாபி என்றும், அமுத சரோவரம் என்றும் பெயர் வழங்கிவருகிறது ஈசன் உடைத்த அக்குடத்தை ஒன்று சேர்த்து லிங்கமாக அமைத்து பூஜித்தார். பிறகு அதிலேயே மறைந்தருளினார். பிர்ம தேவர் மற்றைய தேவர்களுடன் கும்பத்தைத்தேடி வந்தார் லிங்கவடிவான கும்பத்தைக் கண்டார். மெய்மறந்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கினார். ஈசனைப் பலவாறாகத் துதித்தார். தனது படைப்புத் தொழிலுக்கு வேண்டிய மூலப்பொருள்களை ஈசனிடமிருந்து பெற்றார். ஆலய நிர்மாணம் செய்து ஈசனுக்கு உத்ஸவம் செய்தார் இது முதல் இவ்வுத்ஸவத்திற்கு பிர்மோத்ஸவம் எனப்பெயர். ஈசன் கும்பத்தினின்று அருளுவதால் நாமரூபமில்லா ஈசனுக்கு **கும்பேச்வரர்** எனக்காரணப் பெயர் ஏற்பட்டது. ஈசனது சக்தியான தேவியானவள் சகல மந்திரங்களுக்கும் ஆதாரமான 'அ' என்ற எழுத்துமுதல் க்ஷ என்ற எழுத்துவரையுள்ள 51 எழுத்துக்களின் வடிவான அக்ஷமாலையையும், சகல தீர்த்தங்களும் நிறைந்த கிண்டியையும், 'அஞ்சேல்' எனக்கூறும் அபய முத்திரையையும் உடையவளாய் ஈசனது அருகில் அனுக்ரஹ வடிவாக விளங்குகிறாள், அண்டினவர்களுக்கு அழியாமங்களத்தைத் தருவதால் அம்பிகைக்கு **மங்களாம்பிகை** என்றும், படைப்பிற்கு ஆதிகாரணமாக இருந்ததால் **ஆதிகும்பேச்வரர்** என்று ஈசனுக்கும் திருப்பெயர் வழங்கிவருகிறது. இம் மூர்த்தி

யின் காரணமாகவே இத்தலத்திற்கு கும்பகோணம் எனப் பெயர் வந்தது. மேலும் இத்தலத்திலே பல சிவ, விஷ்ணு கோயில்களும் உள்ளன. ஒவ்வொன்றிற்கும் தனித்தனி மாஹாத்மியங்கள் இருக்கின்றன. இவ்வித மூர்த்தங்களையுடைய இத்தலமானது. சைவ, வைஷ்ணவ சமயாசார்யர்களால் பாடல் பெற்றது. கோவிந்ததீக்ஷிதர். ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் முதலியவர்களால் திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளது. அருணகிரிநாதரால் பாடல்பெற்றது. மேலும் இங்கு அவ்வப்பொழுது மதாசார்யர்களும் தத் தம் மடங்களில் இருந்து கொண்டு சிஷ்யர்களுக்கு அருள்புரிந்து வந்திருக்கிறார்கள். இவ்வித சிறப்பு வாய்ந்த இத்தலத்திலே அமுதவாபி முதலிய அனேக புண்ய தீர்த்தங்கள் உள்ளன. ஒரு சமயம் கங்கை முதலிய பெரும் நதிகள் ஈசனிடம் சென்று. "ஈசா! ஜனங்கள் தங்கள் பாபங்களை எங்களிடம் ஸ்நானம் செய்து விட்டுச் செல்கிறார்கள். எங்களிடம் பாபச்சுமை அதிகமாகிறது. எங்களால் தாங்க முடியவில்லை. எங்களது சுமையைப் போக்கி அருளவேண்டும்" என வேண்டினார்கள். அதற்கு விச்வேசர், 'பக்திக்கு இருப்பிடமான தென்னாட்டிலே மிகச் சிறந்த புண்ய ஸ்தலமான கும்பகோண க்ஷேத்திரத்திலே உள்ள அமுதவாபியிலே (மஹாமகக்குளம்) சூரியன் கும்பராசியிலும், குரு சிங்கராசியிலும் இருக்க, மக நக்ஷத்திரத்தில் பூர்ணிமையன்று மூழ்குவீர்களேயானால் உங்கள் பாபச்சுமை நீங்கும். இவ்விதமான புண்யகாலம் கிடைப்பது அரிது. இப்புண்யகாலத்தில் எல்லாத்தேவர்களும், முனிவர்களும், தீர்த்தங்களும் அங்கே வருவார்கள். நாமும் அங்கே போகப்போகிறோம். நீங்களும் எம்முடன் வாருங்கள்" என்று கூறி தேவி விசாலாக்ஷியுடன் விச்வேசர் நவநதிகளையும் அழைத்துக் கொண்டு வந்து அமுதவாபியின் வடபால் கோயில் கொண்டருளியிருக்கிறார். இத்தீர்த்தத்திலே மூழ்குகிறவர்கள் சகலபாபங்களும் அற்றவர்களாய் இஷ்டத்தை அடைவார்கள். இத்தீர்த்தத்திலே அனேககோடி தீர்த்தங்கள் இருக்கின்றன. மற்ற இடங்களில் செய்யும் பாபங்கள் புண்ய க்ஷேத்ரத்தில் அழிகின்றன. புண்ய க்ஷேத்ரங்களில் செய்யும் பாபங்கள் காசியில் அழிகின்றன. ஆனால் அக்காசியில் செய்யும் பாபங்களோ இக் கும்பகோணத்தில் அழிகின்றன மேலும் இந்த க்ஷேத்ரத்தில் செய்யும் பாபங்கள் இங்கேயே அழிகின்றன. இத்தலத்தின்வடபால் காவிரியும் தென்பால் அரிசொல் ஆறும் ஓடுகின்றன. இவ்வித தீர்த்தமகிமை



வாய்ந்தது இத்தலம். "மூர்த்தி தலம், தீர்த்தம் முறையாக வந்தவர்க்கு வார்த்தை சொல்ல சத்குருவும் வாய்க்கும் பராபரமே" என்றார் தாயுமானார். இவ்வித புண்ய க்ஷேத்ரங்களில் நாம் விதிப்படி யாத்திரை செய்து. தீர்த்தமாடி வருவோமானால் அந்த அந்த க்ஷேத்திரங்களிலுள்ள நல்லோர்களின் கூட்டுறவும். தூய சூழ்நிலையினால் தூயமனமும். அதனால் நற்செயல்களில் ஈடுபாடும் ஏற்படுகிறது. நற்செயலில் ஈடுபட்டிருப்பவனுக்கு குரு தானாகவே வந்து அனுக்கிரஹம் செய்வார். பலவற்றிலும் ஒற்றுமையைக்காணும் ஞானத்தையருள்வார். நிற்க, மனிதனின் எண்ணங்கள், சொற்கள், செயல்கள். எல்லாம் இடம். காலம் தகுதி இவைகளுக்கேற்ப பலன்களைத் தருகின்றன. மிகப்புனிதத்தன்மைவாய்ந்த கும்பகோண க்ஷேத்திரத்திலே செய்யும் ஒவ்வொரு நற்செயல்களும் வளர்ந்து பன்மடங்கான நன்மைகளையே தரும். மேலும் 12 ஆண்டுகளுக்கு ஒர் முறை வரக்கூடிய மஹாமக புஷ்பகரமானது இவ்வருடம் நேர்ந்திருப்பதால் மிகப்புனிதமான கிடைப்பதற்கரிய புண்ணிய காலமும் சேர்ந்திருக்கிறது. நற்காரியங்களைச் செய்வதற்கும் நல்லோரைக் காண்பதற்கும் புண்ணியம் செய்யவேண்டும் இந்தப் புண்ணிய க்ஷேத்திரத்தில் நீராட வரும் ஒவ்வொருவரும் புண்ணியவான்களே என்பதில் சந்தேகமில்லை. ஆகவே, புண்ணிய க்ஷேத்திரத்தில், புண்ணிய காலத்தில் புண்ணியவான்களுக்கு அளிக்கும் தானமும், பன்மடங்காகப் பெருகும் இக்காலத்தில் செய்யும் ஸ்நானங்களும், பூஜைகளும் அளவற்ற நற்பலன்களை அளித்து மனதைத் தூய்மைப் படுத்துகின்றன. தூய்மை மனமுடையவர்களுக்கு ஈசனது அருள் அவசியம் கிடைக்கிறது. ஆனால் கோயில், மந்திரம், தீர்த்தம், ஜோதிடன் வைத்தியன், குரு இவர்களிடம் நாம் வைத்திருக்கும் எண்ணத்திற்கேற்பதான் பலனும் கிடைக்கும் ஆகவே, மகரிஷிகளின் வார்த்தையில் உறுதியான நம்பிக்கையுடன் மஹாமகக் குளத்தில் நீராடி ஈசனை தரிசனம் செய்தால், புராணங்களில். சாஸ்திரங்களில் கூறியிருக்கும் சித்திகளும் அவசியம் கிடைக்கின்றன என்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை.

## எனது குருநாதர்

(சுவாமி விவேகானந்தர்)

"தாமரை மலர்ந்ததும் தேனைப்பருகத் தேனீக்கள் தாமேவந்து சேர்கின்றன. அதே போல உன் ஒழுக்கமாகிய தாமரை பரிபூரண மாக மலரட்டும். அதனுடன் பலன்கள் தாமும் பின்பற்றிவருவது நிச்சயம்." என்பது அவரது பிரியமான உவமையாகும். இது அனைவருங்கற்க வேண்டிய பெரியதொரு படிப்பனை, எனது குருநாதர் நூற்றுக் கணக்கான முறை இப்படிப்பஜனையை எனக்குப் போதித்தார். எனினும் இதை அடிக்கடி மறந்து விடுகிறேன். சிந்தனையின் அபாரசக்தியை அறிந்தவர் ஒருசிலரே. ஒரு மனிதன் குகையொன்றில் புகுந்து தன்னை முற்றிலும் அடைத்துக்கொண்டு மிக உன்னதமான ஓர் எண்ணத்தை மாத்திரம் எண்ணிவிட்டு இறந்து பட்டாலுங் கூட. அந்த எண்ணமானது குகையின் சுவர்களைத் துளைத்துக் கொண்டு ஆகாயத்தின் மூலமாகப் பரவி இறுதியில் மனிதவர்க்க முழுவதிலும் ஊடுருவிப் பாய்கின்றது. அவ்வளவு அபாரமானதாகும் சிந்தனை சக்தி என்பது. ஆகவே உன்னுடைய கருத்துப் பிறருக் குரைக்க அவசரப்படாதே; கொடுப்பதற்கு ஏதேனும் முதலில் சம்பாதித்துக்கொள்: கொடுப்பதற்கு ஏதேனும் வைத்துக்கொண்டிருப்பவனே உபதேசம் செய்பவனுவான், ஏனெனில் உபதேசம் வெறும் வாய்ப்பேச்சன்று; உபதேசம் என்பது சில கொள்கைகளை வெளியிடுவது மாத்திரமன்று. ஆனல் தம்முடைய சுபாவத்தைப் பிறருள் செலுத்துவதேயாகும். ஒரு புஷ்பத்தை எங்ஙனம் நான் உமக்குக் கொடுக்கக் கூடுமோ! அதேபோன்று ஆத்ம ஞானமும் அவ்வளவு உண்மையாகப் பிறருக்களிக்கக கூடியதே. இவ்வுபமானம் முற்றிலும் உண்மை. இவ்விஷயம் இந்தியாவில் நெடுங்கால மாக இருந்து வருகின்றது. மேனாட்டில் தீர்க்க தரிசிகளின் தொடர்ச்சியில் இருக்கும் நம்பிக்கையும் கொள்கையுமே இக்கருத்திற் கேற்ற அத்தாட்சியாகும். ஆகவே முதலில் ஒழுக்கம் சம்பாதித்துக் கொள். அதுவே நீ செய்ய வேண்டிய உயர்ந்த தருமம்.

## பெண்கள் விழிப்புற வேண்டும்

(வினோபாஜீ)

இன்று கிராமமக்கள் கூட பீடி. சாராயம் குடிக்கிருர்கள். வாயிலிருந்து ராமநாமத்திற்குப் பதிலாகப் புகை வெளிவருகிறது. சிற் சில சமயங்களில் அவர்கள் வாயில் தீப்பிடித்திருக்கிறது, ஒருவாளி தண்ணீரைக் கொட்டுவோமா என்று தோன்றுகிறது.

கடவுளின் கிருபையால் இன்று சகோதரிகள் பீடி குடிப்பதில்லை. ஆனல் அவர்கள் வீட்டில் கணவன். சகோதரன் ஆகியோர் பீடி குடிக்காமற் செய்யும் சக்தி அவர்களுக்கு இருக்கவேண்டும்.

பெண்கள் எவ்வளவு நாள் அடிமைப்பட்டுக் கிடப்பார்கள்: அவர்கள் தமது ஆடவர்களை நல்வழிப்படுத்தவேண்டும். பீடி சாராயம் குடித்தால் வீட்டில் சமைக்கமாட்டேன் நானும் சாப்பிட மாட்டேன் உனக்கும் போட மாட்டேன் என்று எச்சரிக்கவேண்டும் இத்தகைய தேஜஸையுடைய பெண்கள் தோன்றும்போது நாடு முன்னேறும். இல்லையென்றால் ஆடவர்கள் கிராமத்திற்கும் குடும்பத்திற்கும் தமது சரீரத்திற்கும் கூடத் தீவைக்கும் அளவுக்கு அறிவிலிகளாயிருக்கின்றனர்.

சாதாரணமாக புருஷன் எப்படியிருந்தாலும்சரி அவனைப் பின்பற்றி நடப்பதுதான் நமது கர்மம் என்று பெண்கள் நினைக்கிருர்கள், ஸ்ரீ இராமர் மது அருந்துவதற்காக வனம் செல்கிருர் என்று சீதாப்பிராட்டி அவருடன் செல்லவில்லை அப்படியிருந்தால் சீதை உடன் செல்வதற்குப் பதிலாக அவரைத் தடுத்திருப்பாள். இராமர் தமது வல்லமையால் முனிவர்களுக்குப் பாதுகாப்பளிப்பதற்காகச் சென்றதனல்தான் சீதையும் உடன் சென்ருர்.

அவர்கள் பராக்கிரமமான வேலையைச் செய்தால் அவர்களுடன் சென்று உதவி செய்யவேண்டியது பெண்களின் கடமை: ஆனல் ஆண்கள் தவருன காரியம் செய்யும்போது கூட சும்மா இருப்பது அவர்கள் தர்மமல்ல

தாய் மனைவி சகோதரி இவர்களிடம் மிக்க ஆற்றல்இருக்கிறது இந்த ஆற்றலை ஆண்களைக் காப்பதற்காக உபயோகிக்கவேண்டும் ஆண்களுக்கு வீட்டில் நல்ல கல்விகிடைத்தால் அவர்கள் கெட்ட காரியங்களைச் செய்யமாட்டார்கள். ஆண் குடித்துவிட்டுவந்தால் முகம் கழுவிவிட்டுவா இல்லையென்றால் சாப்பாடுபோடமாட்டேன் என்பாள் பெண். அப்போது அவன் வெட்கப்பட்டு முகத்தைக் கழுவிக்கொண்டு வருவான்

பெண்கள் குடிப்பதில்லை. ஆனல் குடிப்பதைச் சகித்துக் கொண்டிருக்கிருர்கள். ஆண்களே இப்படித்தான் இருக்கிருர்கள் என்றுசொல்லுகிருர்கள். அதாவது ஆண்கள் கெட்டவர்கள் என்று கருதுகின்றனர். ஆனல் அவர்கள் விழிப்படைந்து ஆண்களை நல் வழிப்படுத்த வேண்டும்.

Regd, at the G. P. O. as a News Paper H. D, 59/300

ஆயுள்சந்தா ஆதரவாளர்
திரு. P. சிவநாதபிள்ளை திருகோணமலை

குமரகுருபரன்

சிறந்தவோர் ஆத்மீக மாதவெளியீடு
பத்திரிகையின் முகப்பில் முருகனின் அறுமுகத்தோற்றம்
அழகாகக் காட்சியளிக்கிறது.
வருடச்சந்தா ஒன்றரை ரூபா மாத்திரமே
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடம்
ஸ்ரீவைகுண்டம் தென் இந்தியா
என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

# RELIGIOUS DIGEST.

AN INTERNATIONAL JOURNAL DEVOTED TO THE TEACHINGS OF PROPHETS, SAGES AND SAINTS OF EAST AND WEST.

For the present, it will appear once in two months,

THE ANNUAL SUBSCRIPTION

| | |
|---|---|
| Island Rs. 6.00 | Foreign 9 sh or 2 bollets |
| Malapa 6 dollers | Single Copy Re. 1.00 |

*Please write to* -

**K. RAMACHANDRA.**
**No. 7, 43rd Lane A Vivekananda Road,**
**COLOMBO 6.**

Hony. Editor, K. Ramachandra,
**Printed &** Publisned by N, Muthiah, Athmajothi Nilayam, Nawalapitiya
At Saravana Press, Nawalapitiya 16- 2.56